# வேளாண்மை

## பொதுவான போக்குகள்

*1993 இல் உறுதியாக மீட்சியடைந்த வேளாண்மைத் துறையில் தேயிலை, நெல், சீனி என்பவற்றின் உற்பத்தி 1994 இல் மேலும் முன்னேற்றமடைந்து இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட மட்டங்களில் ஆகக் கூடிய அளவினைக் கொண்டிருந்தது. தேயிலை உற்பத்தி 2,420 இலட்சம் கி. கிறாம்கள் கொண்ட உச்ச உற்பத்தியினைப் பதிவு செய்து 4 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை 1994 இல் இறப்பர் உற்பத்தி 1,050 இலட்சம் கிலோக்கிறாம்களாக அமைந்து முந்திய ஆண்டினை விடச் சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டியது. 1993 இன் உற்பத்தியினை விட 1994 இல் 4 சதவீதத்தால் அதிகரித்த நெல் உற்பத்தி 1985 இல் பதிவு செய்யப்பட்ட முன்னைய அதி உயர் உற்பத்தி மட்டத்தினை 23,000 மெற்றிக் தொன்களினால் விஞ்சியது. சீனி உற்பத்தி முந்திய ஆண்டினைவிட 5 சதவீதத்தால் உயர்வடைந்தது. அநேகமான சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும் துணை உணவுப் பயிர்களினதும் உற்பத்தி 1994 இல் மேம்பட்ட செயலாற்றத்தைப் பதிவு செய்தது.*

*1994 இல் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கொள்கை வழிமுறை என்னவெனில் ஏறத்தாழ ஐந்து வருட இடைவெளிக்குப் பின் வளமாக்கி உதவு தொகை மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டதாகும்.*

## முக்கிய ஏற்றுமதிப் பயிர்கள்

### தேயிலை

*1994 இல் தேயிலை உற்பத்தி 2,420 இலட்சம் கி. கிறாம்களின் மட்டத்தை அடைந்து முந்திய ஆண்டின் உற்பத்தியைவிட 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இதுவரை பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியில் இதுவே மிகவும் கூடியதாகும். ஆய்வுக்குரிய ஆண்டில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளும் சிறந்த முகாமைத்துவமும் மேம்பட்ட இச் செயலாற்றத்திற்குப் பங்களித்தன. 1993 இல் 1,120 இலட்சம் கி. கிறாம்களுக்கு 28 சதவீதத்தால் அதிகரித்த தாழ்நிலத் தேயிலையின் உற்பத்தி 1994 இல் 1,180 இலட்சம் கி. கிறாம்களுக்கு 5 சதவீதத்தால் மேலும் அதிகரித்தது. உயர்நிலத் தேயிலைகளின் வெளியீடு 6 சதவீதத்தால் அதிகரித்து 770 இலட்சம் கிலோக்கிறாம்களினைப் பதிவுசெய்தவேளையில் மத்திய நிலத் தேயிலை 1993 இன் மட்டத்தில் மாறாதிருந்தது. அதேவேளை வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட (சிரிசி) தேயிலையின் உற்பத்தி 1994 இல் 40 சதவீதத்தால் அதிகரித்து 112 இலட்சம் கி. கிறாம்களாக விளங்கியது. இதன்விளைவாக சிரிசி தேயிலைகளின் பங்கு 1993 இன் மொத்த உற்பத்தியின் 3 சதவீதத்திலிருந்து 1994 இல் 4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.*

*1993 இல் தேயிலைத்துறையில் 147,200 மெற்றிக் தொன்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடு 1994 இல் 131,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.*

மூன்று உயர வகைகளிலும் உள்ள புதிய பயிரிடலுக்கான, உதவுதொகை வீதம் 1994 இல் எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 36,000 ஆக மாற்றமின்றியிருந்தது. அதேவேளை மீளப்பயிரிடலுக்கான உதவுதொகை வீதமும் தாழ்நிலப் பிரதேசத்தில் எக்டேயரொன்றிற்கு ரூ. 57,000 ஆகவும் உயர்மற்றும் மத்திய உயரவகைகளில் எக்டேயரொன்றிற்கு ரூ. 67,000/- ஆகவும் விளங்கின. 1994 இல் மீளப் பயிரிடப்பட்ட மற்றும் புதிதாகப் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 5 சதவீதத்தாலும் 10 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து முறையே 1,239 எக்டேயர்களாகவும் 1,450 எக்டேயர்களாகவும் விளங்கியது. இவ்வாண்டில் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மீளப் பயிரிடலுக்கான மொத்த உதவுதொகை ரூ. 330 இலட்சத்திற்கு 13 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் புதிய பயிரிடலுக்கான மொத்த உதவுதொகை ரூ. 420 இலட்சத்திற்கு 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்தி உதவுதொகையின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் 1994 இல் ரூ. 210 இலட்சத்திற்கு 54 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தன.

**அட்டவணை 1.9**


## தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள் 1992 – 1994

| விடயம் | அலகு | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப.இ.கி. கிறாம்கள் | 178.9 | 231.9 | 242.2 |
| 1.1 உயர்நிலம் | " | 53.7 | 72.6 | 76.7 |
| 1.2 மத்திய நிலம் | " | 37.9 | 47.2 | 47.4 |
| 1.3 தாழ் நிலம் | " | 87.3 | 112.1 | 118.1 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு | '000 எக்டேயர்கள் | 222 | வி.கி. (ஈ) | வி.கி. (ஈ) |
| 3. வளமாக்கிப் பாவனை | '000 மெ.தொன்கள் | 110.2 | 147.2 | 131.0 |
| 4. மீளப்பயிரிடல் | எக்டேயர்கள் | 1,417 | 1,311 | 1,239 |
| 5. விலைகள் | | | | |
| 5.1 கொழும்பு (தேறிய) | ரூபா/கி.கி. | 60.51 | 68.88 | 65.12 |
| 5.2 ஏற்றுமதி (க. ஏ. பெ.) | ,, | 81.98 | 91.16 | 91.32 |
| 6. உற்பத்திச் செலவு | ,, | 72.26 | 75.81 | 73.83 |
| 7. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 181.7 | 218.4 | 229.6 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ. ப. இ. | 14,893.4 | 19,911.1 | 20,963.7 |
| | (சிஎஉ. ப. இ.) | (241) | (296) | (296) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) | | 2.0 | 2.4 | 2.3 |

மூலங்கள் : இலங்கைத் தேயிலைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.
(ஈ) 1993 சனவரி 1ஆம் நாளிலிருந்து தேயிலை ஆணையாளர் தேயிலையின் கீழான புதிய நிலங்களைப் பதிவு செய்வதனை நிறுத்திக் கொண்டார்.

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

சிரிசி தேயிலைகளின் உற்பத்திக்காக தொழிற்சாலையை நவீனமயப்படுத்துவதற்காக 1992 இல் அறிமுகப்படுத்தப்பட்ட உதவுதொகைத் திட்டத்தினை இலங்கைத் தேயிலைச் சபை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் பொறிகளின் செலவில் 70 சதவீதம் (மத்திய நில பிரதேசத்திலமைந்துள்ள தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை 85 சதவீதம்) உதவுதொகையாக வழங்கப்படுகின்றது. இத்துடன் 1994 ஒற்றோபர் 1 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் சிரிசி பொறிகளை நிறுவி சிரிசி தேயிலைகளின் உற்பத்தியை ஆரம்பித்திருந்த தொழிற்சாலைகளுக்கு சிரிசி பொறிகளின் செலவில் 15 சதவீதம் ஊக்குவிப்பாக வழங்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக உற்பத்தியில் ஈடுபட்ட மூன்று மாதங்களின் பின்னரே கொடுப்பனவுகள் செய்யப்பட்டன.

1994 இல் தயாரிக்கப்பட்ட தேயிலையின் சராசரி உற்பத்திச் செலவு கி. கி. ஒன்றுக்கு ரூ. 73.83 ஆக மதிப்பிடப்பட்டு முந்திய ஆண்டின் சராசரி உற்பத்திச் செலவினைவிட 3 சதவீதம் குறைவாக விளங்கியது.

கொழும்பு ஏலங்களில் எல்லாத் தேயிலைகளினதும் சராசரி மொத்த விலை 1993 இன் கி. கி. ஒன்றுக்கான ரூ. 68.88 இலிருந்து 1994 இல் கி. கி. ஒன்றுக்கு ரூ. 65.12 ஆக 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது எனினும் சராசரி ஏற்றுமதி (க. ஏ. பெ.) விலை கி. கி. ஒன்றுக்கு ரூ. 91.32 ஆகச் சிறிதளவு உயர்வடைந்தது. கொழும்பு தேயிலை ஏலங்களின் குறைவான விலையும் அதன் விளைவாக நான்காவது தொடர்ச்சியான ஆண்டாக இலாப எல்லை தொடர்ந்து எதிர்க்கணியமாக அமைந்தமையும் தேயிலை பயிரிடுவோர் மற்றும் தயாரிப்பாளரிடையே பெரும் கவனத்திற்குரிய விடயங்களாக அமைந்தன. தாழ்நிலத்தில் பெரும் ஆதிக்கத்தைக் கொண்டிருந்த தனியார் துறையே மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டது. பாதகமான விலைப் போக்குகளைக் கருத்திற்கொண்டு கொழும்பு தேயிலை ஏலங்களில் பெறப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் விலைகள் பற்றி விசாரணை செய்வதற்காக சிறப்பு சனாதிபதி ஆணைக்குழு ஒன்று அரசினால் நியமிக்கப்பட்டது.

1994 இல் தேயிலை வரி கி. கி. ஒன்றுக்கு ரூ. 2.00 ஆக மாற்றமின்றியிருந்தது. இவ்வாண்டில் சேகரிக்கப்பட்ட வரி முந்திய ஆண்டின் ரூ. 4,460 இலட்சத்திலிருந்து ரூ. 4,690 இலட்சத்திற்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது.

## இறப்பர்

1994 இல் இறப்பர் உற்பத்தி 1,050 இலட்சம் கி. கிறாம்களாக மதிப்பிடப்பட்டு முந்திய ஆண்டினைவிட 1 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

தட்டை மற்றும் கிறேப் இறப்பரின் உற்பத்தி இவ்வாண்டில் அதிகரித்தது. மொத்த வெளியீட்டில் 42 சதவீதத்திற்கு வகைகூறும் தட்டை இறப்பர் 1 சதவீதத்தினால் 440 இலட்சம் கி. கிறாம்களுக்கு அதிகரித்த வேளையில் கிறேப் இறப்பரின் உற்பத்தி 4 சதவீதத்தால் 350 இலட்சம் கி. கிறாம்களுக்கு உயர்வடைந்தது. மாறாக தொழில்நுட்பரீதியில் பாகுபடுத்தப்பட்ட இறப்பரின் உற்பத்தி 6 சதவீதத்தால் 130 இலட்சம் கி. கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1994இல் இறப்பர்த் துறையினால் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் மொத்த அளவு 16,700 மெற்றிக் தொன்களாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

1994 இல் இறப்பர்ச் செய்கையின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 191,554 எக்டேயர்களுக்கு 794 எக்டேயர்களினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்த வேளையில் பால் எடுத்தலின் கீழான நிலப்பரப்பு 151,600 எக்டேயர்களுக்கு 4 சதவீதத்தால் அதிகரித்தது. முந்திய ஆண்டில் மீள்நடுகை செய்யப்பட்ட 2,084 எக்டேயர்களுக்கு எதிராக இவ்வாண்டில் 1,374 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டன. 1994 இல் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பும் 538 எக்டேயர்களுக்கு 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மீளப் பயிரிடப்பட்ட மற்றும் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் வீழ்ச்சியடைந்தமையைத் தொடர்ந்து மீளப் பயிரிடலுக்கு வழங்கப்பட்ட உதவு தொகையின் அளவு 38 சதவீதத்தால் ரூ. 650 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் புதிய பயிரிடலுக்காக வழங்கப்பட்ட உதவுதொகை 1993 உடன் ஒப்பிடுகையில் 32 சதவீதத்தினால் ரூ. 220 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது.

இறப்பரின் சராசரி விளைச்சல் 1993இல் எக்டேயருக்கு 714 கி. கிறாம்களிலிருந்து 1994 இல் எக்டேயருக்கு 692 கி. கிறாம்களுக்கு வீழ்ச்சியுற்றது. விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி அனுபவமிக்க பால் எடுப்போர்களுக்கான பற்றாக்குறை காரணமாக பால் எடுக்கும் நாட்கள் குறைவடைந்தமையால் ஏற்பட்டதாகும்.

இறப்பரின் எல்லாத் தரங்களினதும் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1993 இன் கி. கி. ஒன்றுக்கான ரூ. 44.34 இலிருந்து 1994 இல் கி. கி. ஒன்று ரூ. 51.81 இற்கு 17 சதவீதத்தினால் அதிகரித்தது. கொழும்பு ஏலங்களில் ஆர்எஸ்எஸ் 1 இன் ஆண்டு சராசரி விலை கி.கி. ஒன்றுக்கு ரூ. 50.48 இற்கு 42 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் ஆர்எஸ்எஸ் 2 இன் சராசரி விலை 1994 இல் கி.கி. ஒன்று ரூ. 49.57 இற்கு 47 சதவீதத்தால் அதிகரித்தது. கொழும்பு ஏலங்களில் இறப்பரின் விலைகள் செத்தெம்பரின் பிற்பகுதியிலிருந்து முன்னேற்றமடையத் தொடங்கியதுடன் 1994 திசெம்பரில் கி. கி. ஒன்றுக்கு ரூ. 66.17 ஆக எப்போதுமில்லாத அளவிற்கு உயர்வாக விளங்கியது.

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் தரவுகளின்படி சிறு உடைமையாளர்களையும் உள்ளடக்கிய தனியார் துறையினது இறப்பர் உற்பத்திச் செலவு 1994 இல் கி.கி. ஒன்று ரூ. 24.90 ஆகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம் அதிகமானதாகும்.

1985 இலிருந்து உறுதியாக உயர்வடைந்து செல்லும் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 1994 இல் மேலும் 3 சதவீதத்தால் அதிகரித்து 340 இலட்சம் கி. கிறாம்களாக விளங்கியதுடன் இவ்வாண்டின் மொத்த உற்பத்தியில் 32 சதவீதத்திற்கும் வகைகூறியது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத் துறையின் நடவடிக்கைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இவ்வாண்டில் இறப்பரின் உள்நாட்டு நுகர்வின் உயர்ந்த மட்டத்திற்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக விளங்கியது.

அட்டவணை 1.10

இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள் 1992 – 1994

| விடயம் | அலகு | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப. இ. கி. கி. | 106.1 | 104.2 | 105.0 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1 பயிர்ச் செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர்கள் | 194.6 | 192.3 | 191.6 |
| 2.2 பால் எடுக்கும் | ,, | 146.3 | 145.9 | 151.6 |
| 3. விளைச்சல் | கி. கி. / எக்டேயர் | 725 | 714 | 692 |
| 4. வளமாக்கிப் பாவனை | '000 மெ. தொன்கள் | 13.1 | 17.9 | 16.7 |
| 5. மீள் நடுகை | எக்டேயர்கள் | 3,918 | 2,084 (இ) | 1,374 (இ) |
| 6. விலைகள் | | | | |
| 6.1 ஏற்றுமதிகள் (க. ஏ. பெ.) | ரூ. / கி. கி. | 37.65 | 44.34 | 51.81 |
| 6.2 கொழும்பு (ஆர். எஸ். எஸ். 1) | ,, | 29.28 | 35.48 | 50.48 |
| 7. உற்பத்திச் செலவு (ஈ) | ,, | 20.50 | 23.00 | 24.90 |
| 8. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 78.6 | 69.6 | 69.1 |
| 9. உள்நாட்டு நுகர்வு | ,, | 28.8 | 32.9 | 34.0 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ. ப. இ. | 2,959.9 | 3,086.3 | 3,582.2 |
| | (சிஎஉ. ப. இ.) | (48) | (46) | (51) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.0 | 0.7 | 0.9 |

மூலங்கள் : இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், தேசிய வளமாக்கிச் செயலகம், இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சிறு உடைமையாளர்கள் மட்டும்.
(ஈ) தனியார்துறையின் தோட்டங்களினதும் சிறு உடைமைகளினதும் நிறையேற்றப்பட்ட சராசரி உற்பத்திச்செலவு.
(உ) பயிரிடலும், பதனிடலும் மட்டும்.

இறப்பர் சிறு உடைமையாளருக்கு திறமையான பணியினை உறுதிப்படுத்தும் நோக்குடன் இறப்பர்க் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தையும் இலங்கை இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் ஆலோசனைப் பணிகள் திணைக்களத்தினையும் ஒன்றிணைத்து 1994 யூன் 1 இல் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் நிறுவப்பட்டது.

## தெங்கு

1994 இல் தெங்கு உற்பத்தி 26,100 இலட்சம் காய்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் உற்பத்தியினைவிட 21 சதவீதம் உயர்வானதாக இருந்தது. 1986 இற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த மட்ட உற்பத்தி இதுவாகும். தேங்காயின் உற்பத்தி அதிகரித்தமைக்கு 1993இல் நிலவிய சாதகமான வானிலையின் காலங்கடந்த தாக்கம் காரணமாயிருக்கலாம்.

அதிகரித்த தேங்காய் உற்பத்தியினைத் தொடர்ந்து, தேங்காய்த் துருவலின் உற்பத்திக்குச் சமமான காய்களின் அளவு 41 சதவீதத்தினால் அதிகரித்து 3,800

இலட்சம் காய்களை அடைந்து, 1986 இன் பின்னர் மிக உயர்ந்த மட்டத்தைப் பதிவுசெய்தது. 1990 ஆம் ஆண்டிலிருந்தும் வீழ்ச்சிப் போக்கைக் கொண்டிருந்த தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குச் சமமான காய்கள் ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகரிப்புடன் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டி 1994 இல் 4,800 இலட்சம் காய்களைப் பதிவுசெய்தது. 1994 இல் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிக்குச் சமனான காய்கள் மற்றும் உடன் காய்களின் ஏற்றுமதிகளும் 29 சதவீதத்தினாலும் 18 சதவீதத்தினாலும் முறையே 310 இலட்சம் காய்களுக்கும் 260 இலட்சம் காய்களுக்கும் அதிகரித்தன. உள்நாட்டுக் காய் நுகர்வு 16,870 இலட்சம் காய்களுக்கு 1 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டு 1994 இன் மொத்த உற்பத்தியில் 65 சதவீதத்திற்கு வகைகூறியது.

புதிய பயிரிடல் நீங்கலாக, பல்வேறுபட்ட உதவுதொகைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எல்லா பயிரிடல் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக பின்னடைவினைக் கொண்டிருந்தன. 1994 இல் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 657 எக்டேயர்களுக்கு 45 சதவீதத்தினால் அதிகரித்தது. மாறாக, புத்தாக்கம் செய்யப்பட்ட மற்றும் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் 53 சதவீதத்தினாலும் 46 சதவீதத்தினாலும் முறையே 1,062 எக்டேயர்களுக்கும் 842 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தன.

1993 இன் பின்னரைப் பகுதியில் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்படி, புதிய மரங்களை நாட்டுகின்ற முதற் கட்டத்திலேயே முதிர்ந்த மரங்களை முழுமையாகப் பிடுங்குதல் முற்றுப்பெற்றாலொழிய கீழ் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு மீள் பயிரிடலுக்கான உதவுதொகைக்கு உரித்துடையதாகாது. பழைய மரங்களைப் பிடுங்குதல் தொடர்பான விடயத்தில் பயிர்ச் செய்கையாளர்கள் தயக்கம் காட்டியமையே மீள் பயிரிடல் உதவு தொகைக்கான உரித்தினைப் பெறும் நிலப்பரப்பு வீழ்ச்சியடைய வழியமைத்தது.

இவ்வாண்டில் இடைப்பயிர் செய்யப்பட்ட தெங்கு நிலப்பரப்பு 854 எக்டேயர்களுக்கு உயர்ந்து ஐந்து மடங்கு அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வியத்தகு அதிகரிப்பு அடையப்பட்டமைக்கு இடைப் பயிர்ச் செய்கைக்கான உதவுதொகைக்கு உரித்துப் பெற்ற பயிர்களின் வகை அதிகரித்தமையே காரணமாகும்.

1994 இல் தெங்குத் துறையில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கி 30,200 மெற்றிக் தொன்களுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் இவ்வாண்டில் தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் வளமாக்கிக் களஞ்சியங்களினால் வழங்கப்பட்ட அளவு 2,085 மெற்றிக் தொன்களுக்கு 22 சதவீதத்தினால் அதிகரித்தது. தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் பேணப்பட்ட நாற்று மேடைகளின் எண்ணிக்கை 29 ஆக மாற்றமின்றியிருந்தது. இந்நாற்று மேடைகளினால் வழங்கப்பட்ட தென்னங்கன்றுகளின் எண்ணிக்கை 1993 இல் பதிவுசெய்யப்பட்ட 7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 23.6 இலட்சம் தென்னங்கன்றுகளுக்கு மேலும் 37 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

அதிகரித்த தேங்காய் உற்பத்தியின் காரணமாக, கொழும்புச் சந்தையில் உடன் காய்களின் சராசரி மொத்த விற்பனை விலை 1994 இல் காயொன்றுக்கு

ரூ. 3.67 இற்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த மூன்று முக்கிய உள்ளீட்டு உற்பத்திகளினதும் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1994 இல் காயொன்றுக்கு ரூ. 5.67 இற்கு குறைவடைந்து மேலும் 10 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும்,

**அட்டவணை 1.11**

**தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1992–1994**

| விடயம் | அலகு | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
|---|---|---|---|---|
| 1 உற்பத்தி (இ) | ப. இ. காய்களில் | 2,296 | 2,164 | 2,610 |
| 1.1 தேங்காய்த் துருவல் | ப. இ. காய்களில் (ஈ) | 365 | 269 | 380 |
| 1.2 தேங்காய் எண்ணெய் | ப. இ. காய்களில் (ஈ) | 242 | 176 | 480 |
| 1.3 உலர்த்திய தேங்காய் (உ) | ப. இ. காய்களில் (ஈ) | 29 | 24 | 31 |
| 1.4 உடன்காய் ஏற்றுமதிகள் | ப. இ. காய்களில் (ஈ) | 25 | 22 | 26 |
| 1.5 உள்நாட்டுத் தேங்காய் நுகர்வு (ஊ) | ப. இ. காய்களில் | 1,635 | 1,668 | 1,687 |
| 2. சராசரி ஏற்றுமதி விலை (க. ஏ. பெ.) (எ) | காய்க்கு ரூபா | 6.47 | 6.31 | 5.67 |
| 3. வளமாக்கிப் பாவனை | '000 மெ. தொ. | 34.3 | 35.1 | 30.2 |
| 4. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 1.97 | 2.03 | 2.09 |
| 5. மீள் பயிரிடல் / கீழ் பயிரிடல் (ஏ) | எக்டேயர்கள் | 1,589 | 1,553 | 842 |
| 6. புதிய பயிரிடல் (ஏ) | எக்டேயர்கள் | 637 | 452 | 657 |
| 7 ஏற்றுமதி வருவாய்கள் | ப. இ. ரூபா | 3,691 | 2,796 | 3,761 |
| | (சிஎஉ. ப. இ.) | (60) | (41) | (53) |
| 7.1 உள்ளீட்டு உற்பத்திகள் (எ) | ப. இ. ரூபா) | 2,665 | 1,847 | 2,476 |
| 7.2 ஏனைய உற்பத்திகள் | (சிஎஉ. ப. இ) | (43) | (27) | (35) |
| | ப. இ. ரூபா | 1,026 | 949 | 1,285 |
| | (சிஎஉ. ப. இ.) | (17) | (14) | (18) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 3.1 | 2.6 | 2.4 |

மூலங்கள் : தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காயின் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(ஈ) தேங்காய்க்குச் சமமான
1 மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
1 மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
1 மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(உ) ஏற்றுமதிகள் மட்டும்.

(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது.கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.

(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.

(ஏ) விபரமான தரவுகள் கிடைக்காமை காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1993 இல் பெறப்பட்ட சிஎஉ 270 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஎஉ 350 இலட்சத்திற்கு 30 சதவீதத்தினால் அதிகரித்தன. 1994 இல் ஏனைய தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் சிஎஉ 180 இலட்சத்திற்கு 29 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, 1993 இல் 3 சதவீதத்தினால் அதிகரித்த சராசரி உற்பத்திச் செலவு 1994 இல் காயொன்றுக்கு ரூ. 2,09 இற்கு 3 சதவீதத்தினால் மேலும் உயர்வடைந்தது.

தேங்காய்த்துருவல் ஆலைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இவ்வாண்டில் எட்டு ஆலையாளர்களுக்கு மேலும் ரூ. 30 இலட்சம் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. 1993 இல் தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் ஒத்துழைப்புடன் வேளாண்மைக் காப்புறுதிச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதித் திட்டத்தின் கீழ் 1994 இல் தெங்கு புதிதாக பயிரிடப்பட்ட இன்னொரு 480 எக்டேயர் நிலம் காப்புறுதி செய்யப்பட்டது.

### ஏனைய வேளாண்மை உற்பத்திகள்

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த வாசனைத் திரவியங்களையும், குடிபானங்களையும் பரந்த வகையில் உள்ளடக்குகின்றன. இப்பயிர்கள் வீட்டுத் தோட்டங்களிலும் சிறு உடமைகளிலும் முக்கியமாக கலப்புப் பயிர்களாகப் பயிரிடப்படுகின்றன. எனவே இப்பயிர்களின் கீழான பரப்பளவு அல்லது அவற்றின் உற்பத்தி மட்டங்கள் பற்றிய சரியான தரவுகளைப் பெறுவது இடர்ப்பாடாகவுள்ளது. எனினும், இப்பயிர்களின் உற்பத்தியில் பெரும் தொகையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்ற உண்மையின் அடிப்படையில் ஏற்றுமதி அளவுகள் பற்றிய தரவுகள் பயிர் உற்பத்தியைக் கணிப்பதற்கான பதிலிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. உள்நாட்டு நுகர்வும் இருப்பு மாற்றங்களும் மிகச் சிறிதளவே எனக் கருத்திற் கொள்ளப்பட்டமையின் காரணமாக சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி மதிப்பீடுகள் ஓரளவிற்கு தற்காலிகமானவையே.

ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின்படி, கோப்பி, ஏலக்காய் தவிர்ந்த முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களில் பெரும்பாலானவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மாற்றமின்றி விளங்கியது. முன்னைய ஆண்டில் 39 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த கோப்பி உற்பத்தி 1994 இல், 3,687 மெற்றிக் தொன்களை அடைந்து குறிப்பிடத்தக்களவில் 83 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்தது. கோப்பி உற்பத்தி முன்னேற்றம் கண்டமைக்கு சாதகமான வானிலை நிலைமைகளும் 1994 இல் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடுகளுமே காரணங்களாகும். 1993 இல் 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த ஏலக்காய் உற்பத்தி 1994 இல் 40 மெற்றிக் தொன்களுக்கு 33 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 1990 இலிருந்து ஏலக்காய் உற்பத்தியில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்குக் காணப்படுவதற்கு, 1,062 மீற்றர் உயரத்திற்கு மேற்பட்ட காட்டு நிலங்களில் வர்த்தகப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே முக்கிய காரணமாகும். ஏலக்காயின் கீழுள்ள நிலப்பரப்பில் ஏறத்தாழ 60 சதவீதம் இக் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலேயே அமைந்துள்ளது. கறுவாச் சுருளின்

உற்பத்தி 9,696 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து 2 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் கொக்கோ உற்பத்தியும் 1,463 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது. கராம்பு, சாதிக்காய் என்பனவற்றின் உற்பத்தி 1993 இன் மட்டத்தில் மாற்றமின்றியிருந்தது. 1993 இல் உச்சமட்ட உற்பத்தியைப் பதிவு செய்த மிளகு 1994 இல் 4,694 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முன்னைய பருவகாலத்தில் செடிகள் பௌதீக ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டமை காரணமாகும்.

கடந்த இரு ஆண்டுகளாக வீழ்ச்சியைப் பதிவுசெய்த சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறையின் வளமாக்கிப் பயன்பாடு 1994 இல் 5,500 மெற்றிக் தொன்களுக்கு குறைவடைந்து 21 சதவீதம் கொண்ட மேலுமொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. வளமாக்கித் தொகுதி செயல் முறை விளக்க நிகழ்ச்சித் திட்டதின்கீழ் வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வளமாக்கி 424 மெற்றிக் தொன்களுக்கு 66 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 1994 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்ற வேளாண்மையாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட 43 சதவீத வீழ்ச்சியே பெருமளவுக்குக் காரணமாகும்.

ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களின் கீழான மொத்தப் பரப்பு 1994 இல் 68,315 எக்டேயர்களுக்கு 1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மிளகும் கொக்கோவும் சேர்ந்து இவ்வாண்டில் பயிரிடப்பட்ட பரப்பில் ஏற்பட்ட பெரும்பாலும் முழு அதிகரிப்பிற்கும் வகைகூறின. முன்னைய ஆண்டில் 5 சதவீதத்தினால் உயர்வடைந்த மிளகின் கீழான பரப்பளவு 1994 இல் 11,517 எக்டேயர்களுக்கு அதிகரித்து 4 சதவீதம் கொண்ட மேலுமொரு உயர்வினைப் பதிவுசெய்தது. அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் கொக்கோவின் கீழான நிலப்பரப்பு 8,039 எக்டேயர்களுக்கு 3 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1994 இல் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மீள் நடுகை மற்றும் புதிய பயிரிடலில் திருந்திய செயலாற்றம் காணப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் மீளப் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 138 எக்டேயர்களுக்கு 34 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 793 எக்டேயர்களுக்கு 23 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1993 இல் 63 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த கறுவா மற்றும் கொக்கோவின் கீழ் புத்தாக்கம் செய்யப்பட்ட நிலப்பரப்பு 1994 இல் 118 எக்டேயர்களுக்கு குறைவடைந்து 65 சதவீதமான மேலுமொரு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

கேகாலை, கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1989 இல் தொடங்கப்பட்ட கொடுகடன் உதவுதொகைத் திட்டமான மத்திய நில நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் 1994 இல் ஐந்தாவதாண்டாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் புத்தளம், கம்பகா, குருநாகல் ஆகிய மூன்று புதிய மாவட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. முக்கியமான சிறு ஏற்றுமதிப் பயிர்களைப் பெரும்பாலும் உள்ளடக்கிய நீண்டகாலப் பயிர்களின் வர்த்தக உற்பத்தியையும், உற்பத்தியாற்றலையும் அதிகரிப்பதனை இச் செயற்றிட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாண்டில் இச்செயற்றிட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை 1993

இல் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ. 410 இலட்சங்களுக்கு எதிராக 1,440 இலட்சமாக விளங்கியது. 1994 இல் இத் திட்டத்தின்கீழ் நன்மையடைந்த நிலங்களின் மொத்தப் பரப்பளவு முன்னைய ஆண்டின் 598 எக்டேயர்களுடன் ஒப்பிடுகையில் 1,842 எக்டேயர்கள் ஆக விளங்கியது. 1994 இறுதியில் உள்ளவாறு இத்திட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் ஒன்றுசேர்ந்த தொகை ரூ. 2,500 இலட்சமாகவும் நன்மையடைந்த மொத்த நிலப்பரப்பு 4,078 எக்டேயர்களாகவும் விளங்கின.

1994 இல், இதுவரை புறக்கணிக்கப்பட்டுவந்த வனிலா, மற்றும் பாக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு, இப்பயிர்களின் சிறிய மற்றும் பெரிய அளவுப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான பயிரிடல் பொருட்களையும் தொழில் நுட்ப அறிவையும் வழங்குகின்ற புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

## உள்நாட்டு வேளாண்மை

### நெல்

1994 இல் நெல் உற்பத்தி 26.8 இலட்சம் மெற்றிக் தொன்கள் (1,290 இலட்சம் புசல்கள்) என குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு முந்திய ஆண்டின் உற்பத்தியினைவிட 4.4 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இதுவரை பதிவுசெய்யப்பட்ட உற்பத்தி மட்டங்களில் இதுமிக உயர்ந்ததாகக் காணப்பட்டு 1985 இல் பதிவுசெய்யப்பட்ட முந்திய உச்ச உற்பத்தி அளவினை 23 ஆயிரம் மெற்றிக் தொன்களால் விஞ்சிக் காணப்பட்டது. திருந்திய இச்செயலாற்றம் சிறுபோக உற்பத்தி அதிகரித்தமையால் முற்றாக ஏற்பட்டது.

1993/94 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 16.7 இலட்சம் மெற்றிக் தொன்கள் (800 இலட்சம் புசல்கள்) என மதிப்பிடப்பட்டு முந்திய பெரும்போகத்தின் உற்பத்தியைவிட 1 சதவீதம் குறைந்திருந்தது. இப்பருவகாலத்தில் விதைக்கப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான நிலப்பரப்பு உண்மையில் அதிகரித்திருந்தபோதும் சராசரி விளைச்சல் குறைவடைந்தமையே நலிவடைந்த செயலாற்றத்துக்குக் காரணமாகும். தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக குருநாகல் மாவட்டம் பெரும் போகத்தில் 262,000 மெற்றிக் தொன்கள் கொண்ட உயர் உற்பத்தியைப் பதிவுசெய்து, பெரும்போகத்தின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட 16 சதவீதத்திற்கு வகைகூறியது. குருநாகல், அநுராதபுர மாவட்டங்கள் ஒன்றுசேர்ந்து பெரும் போகத்தின் முழு உற்பத்தியில் நான்கிலொரு பங்கிற்கும் கூடியளவிற்கு (27 சதவீதம்) வகைகூறியது.

1993 இல் 24 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த சிறுபோக நெல் உற்பத்தி 1994இல் மேலும் 16 சதவீதத்தால் 10 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு (490 இலட்சம் புசல்கள்) மேலாக அதிகரித்தது. விளைச்சல் வீழ்ச்சியடைந்தபோதும் சிறு போகத்தில் விதைக்கப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான நிலப்பரப்பு அதிகரித்தமையினால் நெல் உற்பத்தி அதிகரித்திருந்தது. சிறு போகத்தில் அம்பாறை மாவட்டம் 197,000 மெற்றிக் தொன்கள் கொண்ட உயர்ந்த உற்பத்தியைப் பதிவு செய்து மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட ஐந்திலொரு பங்கிற்கு வகைகூறியது. முக்கிய நீர்ப்பாய்ச்சல் திட்டங்களின் கீழ் நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் அம்பாறை, பொலனறுவை மாவட்டங்கள் இரண்டும் இணைந்து முழு சிறுபோக

உற்பத்தியில் மூன்றிலொரு பங்கிற்கு கூடுதலான அளவிற்கு (36 சதவீதம்) வகை கூறின.

1994 இல் நெல்லின் எக்டேயர் ஒன்றுக்கான ஆண்டுச் சராசரி விளைச்சல் முன்னைய ஆண்டைவிட 4 சதவீதத்தினால் 3,363 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இது 1984 இலிருந்து பதிவுசெய்யப்பட்ட ஆகக்குறைந்த விளைச்சலாகும். மோசமான இச்செயலாற்றமானது இரு போகங்களிலும் அவதானிக்கப்பட்டது. சாதகமான வானிலை மேலதிகமான நீர் வழங்கலுக்கு வழியமைத்தமையினால் எல்லை நிலங்கள் நெற்செய்கையின்கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு எல்லை நிலங்கள் பயிரிடப்பட்டமை மொத்த விளைச்சலில் வீழ்ச்சியைக் கொண்டுவந்தது. 1993/94 பெரும் போகத்தின் சராசரி விளைச்சல் 5 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 3,345 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. முன்னைய சிறுபோகத்தில் 7 சதவீதத்தினால் அதிகரித்த சராசரி விளைச்சல் 1994 சிறுபோகத்தில் 2 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 3,393 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1993/94 பெரும் போகத்தில் உடவளவைப் பிரதேசம் மீண்டும் அதி உயர் சராசரி விளைச்சலைப் பதிவு செய்தது. (எக்டேயர் ஒன்றுக்கு 4,840 கிலோக்கிறாம்கள்) மகாவலி "எச்" பிரதேசம் எக்டேயர் ஒன்றுக்கு 4,830 கிலோக்கிறாம் சராசரி விளைச்சலைப் பதிவு செய்தது. உடவளவைப் பிரதேசமும் தொடர்ச்சியாக ஒன்பதாவது ஆண்டாக சிறுபோகத்திலும் அதி உயர் சராசரி விளைச்சலைப் (எக்டேயர் ஒன்றுக்கு 4,757 கிலோக்கிறாம்கள்) பதிவு செய்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1993/94 பெரும்போகத்தில் மூன்று நீர்ப்பாசன வகைகளிலும் அதாவது பாரிய நீர்ப்பாய்ச்சல், சிறிய நீர்ப்பாய்ச்சல் மற்றும் மழை நீரை நம்பிய பகுதிகளில் வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன. பாரிய நீர்ப்பாய்ச்சல் பிரதேசங்களில் சராசரி விளைச்சல் கணிசமாக 20 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 3,400 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் சிறிய நீர்ப்பாய்ச்சல் மற்றும் மழை நீரை நம்பிய பிரேதசங்களில் விளைச்சல் முறையே 6 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் எக்டேயர் ஒன்றுக்கு 3,080 கிலோக்கிறாம்களுக்கும் 2,840 கிலோக் கிறாம்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. பாரிய நீர்ப்பாய்ச்சல் பிரதேசங்களில் சிறுபோக சராசரி விளைச்சலும் 8 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 3,871 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மாறாக, 1994 சிறுபோகத்தில் சிறிய நீர்ப்பாசன மற்றும் மழைநீரை நம்பிய பிரதேசங்களில் விளைச்சல் முறையே 3 சதவீதத்தினாலும் 4 சதவீதத்தினாலும் எக்டேயர் ஒன்றுக்கு 2,932 கிலோக்கிறாம்களுக்கும் 2,454 கிலோக்கிறாம்களுக்கும் அதிகரித்தது.

1993 இல் 4 சதவீதத்தினால் அதிகரித்த நெல் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு 1994 இல் மேலும் 11 சதவீதத்தினால் 930,000 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. விதைக்கப்பட்ட பரப்பின் விரிவாக்கத்திற்கு இரு போகங்களும் பங்களிப்புச் செய்தன. பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்தப்பரப்பு 6 சதவீதத்தினால் 581,000 எக்டேயர்களுக்கு அதிகரித்த வேளையில் சிறுபோகத்தில் 349,000 எக்டேயர்களுக்கு 21 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.

1993 இல் 7 சதவீதத்தினால் அதிகரித்த அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 1994 இல் மேலும் 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து 897,000 எக்டேயர்களாக விளங்கியது. சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்தப்பரப்பு 336,000 எக்டேயர்களுக்கு 19 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்த வேளையில் பெரும்போகத்தில் 561,000 எக்டேயர்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது.

### அட்டவணை 1.12

### நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1993 - 1994

| விடயம் | அலகு | 1993 (அ) | | | 1994 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 546 | 289 | 835 | 581 | 349 | 930 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 418 | 185 | 603 | 633 | 211 | 844 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 538 | 282 | 820 | 561 | 336 | 897 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) | கி. கிறாம்கள் | 3,516 | 3,481 | 3,511 | 3,345 | 3,393 | 3,363 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 480 | 252 | 732 | 499 | 299 | 798 |
| உற்பத்தி | '000 மெ. தொன்கள் ('000 புசல்கள்) | 1,692 (81,124) | 878 (42,089) | 2,570 (123,213) | 1,670 (80,054) | 1,014 (48,616) | 2,684 (128,670) |
| உ. வி. தி. கீழ் கொள் வனவு செய்யப்பட்டவை (ஈ) | '000 மெ. தொன்கள் | 42 | 4 | 46 | 69 | 51 | 120 |
| அரிசி இறக்குமதி (நெல்லிற்குச் சமன்) | '000 மெ. தொன்கள் ('000 மெ. தொன்கள்) | _ (-) | _ (-) | 209 (299) | - (-) | - (-) | 58 (85) |

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை, காணிகள், காடாக்கல் அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.
(ஈ) ஒகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக அறுவடை கொள்வனவு செய்யப்பட்ட வேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி 1994 இல் நெற்றுறையின் வளமாக்கிப் பயன்பாடு 8 சதவீதத்தினால் 267,400 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

1994 இல் 120,000 மெற்றிக் தொன்களாக விளங்கிய நெற் சந்தைப்படுத்தல் சபையின் நெற் கொள்வனவுகள் முன்னைய ஆண்டைவிட இரு மடங்கிற்கும் மேலான அதிகரிப்பைப் பதிவு செய்து மொத்த உற்பத்தியில் 4 சதவீதத்திற்கு வகைகூறின. நெல்லின் உத்தரவாத விலை ஆண்டு முழுவதிலும் புசல் ஒன்றுக்கு ரூ. 155 ஆக மாறாது காணப்பட்டது.

1994 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் நெற்றுறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 40 சதவீதத்தினால் ரூ. 8,440 இலட்சத்திற்கு அதிகரித்தது.

விரையம் மற்றும் விதை நெல் தேவைகளுக்கும் சீராக்கம் செய்த பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லுக்குச் சமமான அரிசியின் அளவு 1,606,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது. ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நுகர்வுடன் ஒப்பிடுகையில் இது சுயதேவைப் பூர்த்தியில் 87 சதவீதத்தைக் காட்டியது. 1993 இல் இது சுயதேவைப் பூர்த்தியில் 84 சதவீதமாக விளங்கியது.

அதிகரித்த உற்பதியினைத் தொடர்ந்து அரிசி இறக்குமதி 1993 இன் 209,000 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இல் 58,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

**சீனி**

1994 இல் 72,275 மெற்றிக் தொன்களாக விளங்கிய சீனி உற்பத்தி இதுவரையில் பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய உற்பத்தியாக விளங்கியதோடு 1993 இன் உற்பத்தியைவிட 5 சதவீதம் உயர்வாக விளங்கியது. மேம்பட்ட வெளியீட்டிற்கு முன்னைய ஆண்டைப் போலவே இங்குரானை, செவனகலை, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகள் பங்களிப்புச் செய்தன. இங்குரானை தொழிற்சாலையின் உற்பத்தி 9 சதவீதத்தினால் 14,058 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. 1993 இல் 17 சதவீதத்தினால் அதிகரித்த செவனகலை தொழிற்சாலையின் உற்பத்தி 1994 இல் இதேபோன்றதொரு அதிகரிப்பைப் பதிவு செய்து 18,535 மெற்றிக் தொன்களை அடைந்தது. 1994 இல் பெல்வத்தை தொழிற்சாலையின் வெளியீடு சிறிதளவினால் 39,682 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் கந்தளாய் சீனித்தொழிற்சாலையில் எத்தகைய உற்பத்தியும் பதிவு செய்யப்படவில்லை.

இங்குரானையின் உற்பத்தி வளர்ச்சிக்கு ஆலையிடப்பட்ட கரும்பின் தொகை அதிகரிப்பும் சீனி பெறப்படும் வீதத்தின் மேம்பாடும் பங்களிப்புச் செய்தன. சீனி பெறும் வீதம் வீழ்ச்சியடைந்த போதும் இரண்டு தொழிற்சாலைகளிலும் ஆலையிடப்பட்ட கரும்பின் தொகை அதிகரித்தமையின் காரணமாக பெல்வத்தை, செவனகலை என்பனவற்றின் சீனி உற்பத்தி அதிகரித்தது. 1994 இல் அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆலையிடப்பட்ட கரும்பின் தொகை 8 சதவீதத்தினால் 877,992 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இங்குரானை, செவனகலை மற்றும் பெல்வத்தை தொழிற்சாலைகளில் ஆலையிடப்பட்ட கரும்பின் தொகை முறையே

அட்டவணை 1.13

## சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள் 1993 – 1994

| | விடயம் | அலகு | இங்குராணை சீனித் தொழிற்சாலை | | கந்தளாய் சீனித் தொழிற்சாலை | | செவனகலை சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1993 (அ) | 1994 (ஆ) | 1993 (அ) | 1994 (ஆ) | 1993 (அ) | 1994 (ஆ) | 1993 (அ) | 1994 (ஆ) | 1993 (அ) | 1994 (ஆ) |
| 1. | கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (முளை தோன்றியதும்) (இ) ... | எக்டேயர்கள் | 2,720 | 3,019 | 862 | – | 3,259 | 3,460 | 6,049 | 6,056 | 12,890 | 12,535 |
| 2. | அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (இ) ... | எக்டேயர்கள் | 2,263 | 2,505 | 450 | – | 2,378 | 2,331 | 6,004 | 4,009 | 11,095 | 8,845 |
| 3. | அறுவடை செய்யப்பட்ட கரும்பு (இ) ... | மெ. தொன்கள் | 139,758 | 140,217 | 7,689 | – | 174,268 | 210,105 | 296,207 | 243,482 | 617,922 | 593,804 |
| 4. | தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு ... | மெ. தொன்கள் | 35,806 | 48,605 | – | – | 866 | 1,748 | 155,140 | 233,835 | 191,812 | 284,188 |
| 5. | பிழியப்பட்ட கரும்பின் அளவு ... | மெ. தொன்கள் | 175,564 | 188,822 | 7,689 | – | 175,134 | 211,853 | 451,347 | 477,317 | 809,733 | 877,992 |
| 6. | சராசரி விளைச்சல் (இ) | மெ. தொன்கள்/ எக்டேயர் | 61.75 | 55.97 | 17.09 | – | 72.91 | 90.10 | 49.33 | 60.73 | 55.69 | 67.13 |
| 7. | உற்பத்தி செய்யப்பட்ட சீனி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) ... | மெ. தொன்கள் | 12,880 | 14,058 | 366 | – | 15,895 | 18,535 | 39,462 | 39,682 | 68,603 | 72,275 |
| 8. | சீனி பெறப்பட்ட வீதம் (ஈ) ... | % | 7.35 | 7.45 | 4.90 | – | 9.20 | 8.74 | 8.74 | 8.31 | 8.47 | 8.23 |

மூலங்கள் : வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட செவனகலை சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட இங்குராணை சீனிக் கைத்தொழில்கள்

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.
(ஈ) கரும்பு பிழிதல் வீதம் $= \frac{\text{சீனி உற்பத்தி}}{\text{ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

7 சதவீதத்தாலும், 21 சதவீதத்தாலும், 16 சதவீதத்தாலும் 188,822 மெற்றிக் தொன்களுக்கும் 211,853 மெற்றிக் தொன்களுக்கும் 477,317 மெற்றிக் தொன்களுக்கும் அதிகரித்தன.

மூன்று தொழிற்சாலைகளிலும் மொத்தமாக சீனி பெறும் வீதம் 1993 இன் 8.47 சதவீதத்திலிருந்து 1994 இல் 8.23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இங்குரானைத் தொழிற்சாலையின் சீனிபெறும் வீதம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் மேம்பாடடைந்தது எனினும் பெல்வத்தை, செவனகலைத் தொழிற்சாலைகளின் சீனி பெறும் வீதம் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியின் மத்தியிலும் செவனகலைத் தொழிற்சாலையின் சீனி பெறும் வீதம் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக (8.74 சதவீதம்) மிகச் சிறந்த அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

இவ்வாண்டில் கந்தளாய் தவிர்ந்த மூன்று சீனிக் கம்பனிகளாலும் முளைவிடுதல் உட்பட கரும்புப் பயிர்ச் செய்கையில் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு 12,535 எக்டேயர்களாக விளங்கியது. இங்குரானை, செவனகலை ஆகிய இரண்டிலும் கரும்புப் பயிரின் கீழான பரப்பு முறையே 11 சதவீதத்தாலும், 6 சதவீதத்தாலும் 3,019 எக்டேயர்களுக்கும் 3,460 எக்டேயர்களுக்கும் அதிகரித்தது. பெல்வத்தையில் கரும்புப் பயிரின் கீழான பரப்பு இவ்வாண்டில் சிறிதளவாக 7 எக்டேயர்களினால் 6,056 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

இங்குரானையில் அறுவடை செய்யப்பட்ட கரும்பு 11 சதவீதத்தினால் 2,505 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. செவனகலை, பெல்வத்தை ஆகியவற்றின் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு முறையே 2 சதவீதத்தினாலும் 33 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் 8,845 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மூன்று தொழிற்சாலைகளினாலும் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 1993 இல் அறுவடை செய்யப்பட்ட அளவுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 4 சதவீதத்தினால் 593,804 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இங்குரானையில் அறுவடை செய்யப்பட்ட கரும்பு 139,758 மெற்றிக் தொன்களிலிருந்து சிறிதளவால் 140,217 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்த வேளையில் செவனகலையில் கரும்பு அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு வீழ்ச்சியடைந்த போதும் அறுவடை செய்யப்பட்ட அளவு 21 சதவீதத்தினால் 210,105 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. பெல்வத்தையில் அறுவடைசெய்யப்பட்ட அளவு 18 சதவீதத்தினால் 243,482 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

இங்குரானைத் தொழிற்சாலையினால் பேணப்பட்ட கரும்பின் சராசரி விளைச்சல் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் பெல்வத்தை, செவனகலை என்பனவற்றின் சராசரி விளைச்சல் முறையே 23 சதவீதத்தினாலும், 24 சதவீதத்தினாலும் கணிசமான அளவு அதிகரித்ததன்விளைவாக 1994 இல் மூன்று தொழிற்சாலைகளினதும் மொத்த சராசரி விளைச்சல் 21 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றுக்கு 67.13 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

1994 இல் தனிப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களினால் வழங்கப்பட்ட கரும்பின் அளவு 284,188 மெற்றிக் தொன்களுக்கு 48 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. செவனகலை தொழிற்சாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவு இரண்டு மடங்கு அதிகரித்த வேளையில் இங்குராணை, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளினால் கொள்வனவு செய்யப்பட்ட அளவு 36 சதவீதத்தினாலும் 51 சதவீதத்தினாலும் முறையே 48,605 மெற்றிக் தொன்களுக்கும் 233,835 மெற்றிக் தொன்களுக்கும் அதிகரித்தது.

**சிறு உணவுப் பயிர்கள்**

உருளைக்கிழங்கு, மிளகாய், பெரிய வெங்காயம், சின்னவெங்காயம் என்பன தவிர்ந்த ஏனைய சிறு உணவுப் பயிர்கள் காடழித்தலின் கீழான (சேனைப்பயிர்) பயிர்ச் செய்கைமுறையில் பெரும்பாலும் கலப்புப் பயிர்களாக அல்லது வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்படுகின்றன. எனவே சிறு உணவுப் பயிர்கள் தொடர்பாக நம்பத்தகுந்த, உறுதியான தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாததோடு கிடைக்கத்தக்க தகவல்களில் பெரும்பாலனவை செப்பமற்ற மதிப்பீடுகளின் அடிப்படையிலானவையாகும். எனவே சிறு உணவுப் பயிர்களின் செயலாற்றம் தொடர்பான பகுப்பாய்வானது சார்புரீதியில் கடினமான செயலொன்றாகும்.

**அட்டவணை 1.14**

**சிறு உணவுப் பயிர்களுக்கான அடிமட்ட விலைத்திட்டம்**
1992 - 1994

(கிலோக்கிறாமொன்றிற்கு ரூபா)

| பயிர் | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|
| சோளம் ... | 5.25 | 6.00 | 6.00 |
| குரக்கன் ... | 5.00 | 5.00 | 5.00 |
| நிலக்கடலை (கோதுடன்) ... | 8.15 | 8.15 | 8.15 |
| சோயா அவரை ... | 7.30 | 14.00 | 14.00 |
| எள்ளு | | | |
| கறுப்பு ... | 8.00 | 8.00 | 8.00 |
| வெள்ளை ... | 9.90 | 9.90 | 9.90 |
| தட்டைப் பயறு ... | 9.00 | 9.00 | 9.00 |
| பாசிப்பயறு ... | 12.00 | 20.00 | 20.00 |
| உழுந்து ... | 7.50 | 7.50 | 7.50 |

மூலம் : வேளாண்மை, காணிகள், காடாக்கல் அமைச்சு.

வேளாண்மை, காணி மற்றும் காடாக்கல் அமைச்சினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி 1994 இல் சிறு உணவுப் பயிர்கள்துறை கலப்பான

செயலாற்றத்தைக் காட்டியது. பெரிய வெங்காய உற்பத்தி இருமடங்கிற்கும் மேலாக 81,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தவேளையில் சோயா அவரை, நிலக்கடலை மற்றும் குரக்கன் என்பனவற்றின் உற்பத்தி முறையே 46 சதவீதத்தினாலும் 33 சதவீதத்தினாலும் 9 சதவீதத்தினாலும் அதிகரித்தது. பெரிய வெங்காயம், சோயாஅவரை மற்றும் நிலக்கடலை என்பனவற்றின் கணிசமான அதிகரிப்புக்கு இப்பயிர்களின் பயிரிடப்பட்ட பரப்பு அதிகரித்தமையே காரணமாகும்.

இதே வேளையில் மிளகாய், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், பயறு, உழுந்து, தட்டைப்பயறு, எள்ளு மற்றும் சோளம் போன்ற ஏனைய சிறு உணவுப் பயிர்கள் 1994 இல் குறைந்த உற்பத்தியினைப் பதிவு செய்தன. பயிரிடப்பட்ட பரப்பு அதிகரித்தபோதும் சராசரி விளைச்சலின் வீழ்ச்சியின் காரணமாக சோளம், உருளைக்கிழங்கு, உழுந்து என்பனவற்றின் வெளியீடு வீழ்ச்சியடைந்தவேளையில் பயிரிடப்பட்ட பரப்பு குறைவடைந்தமையின் காரணமாக மிளகாய், சின்ன வெங்காயம், பயறு, எள்ளு என்பனவற்றின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது. தட்டைப்பயறு உற்பத்தியின் வீழ்ச்சியானது பயிரிடப்பட்ட பரப்பு குறைவடைந்தமையினதும் குறைந்த விளைச்சலினதும் இணைந்த விளைவாகும்.

நெற் சந்தைப்படுத்தும் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட சிறு உணவுப் பயிர்களுக்கான அடிமட்ட விலைத் திட்டமானது 1994 இலும் செயற்பட்டது. அடிமட்ட விலைகள் முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே மாறாது காணப்பட்டன.

சிறு உணவுப் பயிர்த்துறையினால் பயன்படுத்தப்பட்ட வளமாக்கி 1993 இன் 44,300 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இல் 35,300 மெற்றிக் தொன்களுக்கு 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**மீனும் கால்நடையும்**

1994 இல் மீன் உற்பத்தி 224,000 மெற்றிக் தொன்கள் என கடற்றொழில், நீர்வாழ் உயிரின மூலவளங்கள் அமைச்சினால் தற்காலிகமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 1 சதவீத அதிகரிப்பாகவும் இருந்தது. உள்ளூர் மீன்பிடித்துறையின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையின் மத்தியிலும் எய்தப்பெற்ற இவ்வுற்பத்தி அதிகரிப்பானது முழுமையாகவே கடல்சார் துறைமேம்பாடடைந்தமையின் காரணமாக ஏற்பட்டதாகும்.

மொத்த மீன் உற்பத்தியில் 78 சதவீதத்திற்கு வகைகூறிய கரையோர மீன்பிடித் துணைத் துறையின் வெளியீடு 1993 இன் 169,900 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இல் 174,500 மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. கரைகடந்த மற்றும் ஆழ்கடல் துணைத்துறையின் உற்பத்தி 14 சதவீதத்தினால் 37,500 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. மாறாக, உள்ளூர் மீன்பிடித்துறையின் உற்பத்தி 33 சதவீதத்தினால் 12,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1990 இல் அரசின் ஆதரவு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து கிரமமாக வீழ்ச்சியடைந்து வந்த உள்ளூர் மீன் உற்பத்தி 1989 இன் மொத்த மீன் உற்பத்தியின் 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 5 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறியது.

கடந்த காலத்தைப் போலவே தனியார் துறை தொடர்ந்தும் மீன்பிடித்துறையில் ஆதிக்கம் செலுத்தியதோடு மொத்த உற்பத்தியில் 99 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மொத்த மீன் வழங்கல் 1994 இல் 2,222 மெற்றிக் தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டைவிட 14 சதவீத அதிகரிப்பாகவும் இருந்தது. 1993இல் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உறை நீர்க்கட்டி உற்பத்தி 1994 இல் மேலும் 18 சதவீதத்தினால் 3,698 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1994 இல் கடல்சார் துறைக்கு வழங்கப்பட்ட உதவிக் கொடுப்பனவுகள் ரூ. 750 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட அதே அளவினதாக விளங்கியது. 1994இல் பலதரப்பட்ட உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களின் கீழ் 109 படகுகளும் 145 மரபு வழிக் கலங்களும் 40 பலநாட் படகுகளும் கடல்சார் மீன்பிடித்துறைக்கு வழங்கப்பட்டன. கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கையும் இவற்றின் மொத்த உறுப்பினர் தொகையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 769 ஆகவும் 86,966 ஆகவும் மாறாது காணப்பட்டன. இதேவேளையில் 1994 இல் அனைத்துவகை மீன்களினதும் சராசரி சில்லறை விலைகள் 20 சதவீதத்தினால் அதிகரித்தன.

**அட்டவணை 1.15**

**மீன் உற்பத்தி 1990 - 1994**

(மெற்றிக் தொன்கள்)

| துணைத்துறை | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 (அ) |
|---|---|---|---|---|---|
| கரையோர | 134,132 | 159,151 | 163,168 | 169,900 | 174,500 |
| ஆழ்கடலும் கரைக்கு அப்பாலும் | 11,666 | 15,080 | 22,000 | 33,000 | 37,500 |
| உள்நாட்டு | 31,265 | 23,832 | 21,000 | 18,000 | 12.000 |
| மொத்தம் | 177,063 | 198,063 | 206,168 | 220,900 | 224,000 |

மூலம் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு.

(அ) தற்காலிகமானவை.

குடி மதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி முட்டை உற்பத்தி 1993 இன் 8,570 இலட்சத்திலிருந்து 1994 இல் 8,580 இலட்சத்திற்கு சிறிதளவினால் அதிகரித்தது. இதேவேளையில் 1994 இல் 3,330 இலட்சம் இலீற்றர்கள் என மதிப்பிடப்பட்ட பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) முன்னைய ஆண்டைவிட 2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1994 இல் வரையறுக்கப்பட்ட மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா கம்பனியினால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 440 இலட்சம் இலீற்றர்களாக விளங்கி 1993 இனைவிட 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதேவேளையில் வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்காவின் பால் சேகரிப்பும் 9 சதவீதத்தால் 340 இலட்சம் இலீற்றர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பை ஈடுசெய்யும்வகையில்

பால் உற்பத்தியாளர்விலை 1994 சனவரி 1 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் இலீற்றர் ஒன்று ரூ. 9.25 இலிருந்து இலீற்றர் ஒன்றுக்கு ரூ. 10.00 இற்கு அதிகரிக்கப்பட்டது. 1994 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து பால் உற்பத்தியாளர்களின் விலை மேலும் 54 சதத்தினால் இலீற்றர் ஒன்று ரூ. 10.54 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**வளமாக்கி**

ஏறத்தாழ ஐந்து வருட இடைவெளிக்குப் பின் அரசு 1994 ஒற்றோபர் 10 இலிருந்து வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தினை மீண்டும் அறிமுகப்படுத்தியது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி, பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் மொத்த அளவு 1993 இல் பதிவுசெய்யப்பட்ட 15 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 1994 இல் 2 சதவீதத்தால் 539,900 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மொத்தப் பயன்பாட்டில் மிகப்பெரும் அளவிலான 50 சதவீதப் பங்கிற்கு வகைகூறும் நெற்றுறையின் வளமாக்கிப் பயன்பாடு 8 சதவீதத்தால் உயர்வடைந்தது. மாறாக, தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைகளின் வளமாக்கிப் பயன்பாடு முறையே 11 சதவீதத்தாலும் 7 சதவீதத்தாலும் 14 சதவீதத்தாலும் 21 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. வளமாக்கி உதவுதொகை மீண்டும் அறிமுகப்படுத்தப்படுமென எதிர்பார்த்தமையினால் வளமாக்கியின் பாவனையும் பங்கீடும் இவ்வாண்டில் வீழ்ச்சியுற்றன.

கடந்த காலத்தில் முக்கிய வளமாக்கி இறக்குமதியாளராக விளங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை வளமாக்கி கம்பனி 1994 இலும் தொடர்ந்து முதன்மை வகித்து மொத்த இறக்குமதியில் 30 சதவீதத்திற்கு (159,123 மெற்றிக் தொன்கள்) வகைகூறியது. ஏனைய இறக்குமதியாளர்களினால் செய்யப்பட்ட வளமாக்கி இறக்குமதிகள் 1994 இல் 1 சதவீதத்தினால் 380,365 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த விற்பனையாளர்களின் வசமிருந்த வளமாக்கியின் கையிருப்பு ஆண்டின் தொடக்கத்தில் 94,032 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இறுதியில் 93,620 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட எல்லா முக்கிய வளமாக்கி வகைகளினதும் உலக விலைகள் அதிகரித்திருந்தன. யூரியாவைப் பொறுத்தவரை அதிகரித்த மூலப் பொருள் விலைகள் மற்றும் முக்கிய உற்பத்தி நாடுகளில் யூரியாப் பொறிகள் மூடப்பட்டமை ஆகிய காரணங்களினால் விலை அதிகரிப்பு மிகவும் கூடுதலாக இருந்தது.

### அட்டவணை 1.16

### பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு 1991 - 1994

('000 மெற்றிக் தொன்கள்)

| பயிர் | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. நெல் | 179.3 | 207.8 | 248.0 | 267.4 |
| 2. தேயிலை | 118.9 | 110.2 | 147.2 | 131.0 |
| 3. இறப்பர் | 13.7 | 13.1 | 17.9 | 16.7 |
| 4. தெங்கு | 28.8 | 34.3 | 35.1 | 30.2 |
| 5. சிறு உணவுப் பயிர்கள் | 50.7 | 49.5 | 44.3 | 35.3 |
| 6. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 11.1 | 7.1 | 7.0 | 5.5 |
| 7. ஏனையவை | 51.2 | 53.8 | 48.6 | 53.7 |
| மொத்தம் | 453.7 | 475.8 | 548.1 | 539.9 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்

### அட்டவணை 1.17

### மொத்த விற்பனையாளர்களின்படி வளமாக்கி விற்பனைகள் 1993 - 1994

| துறை | 1993 (அ) | | 1994 (ஆ) | | 1993 இற்கும் 1994 இற்கும் இடையேயான அளவின் சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | அளவு (மெற்றிக் தொன்) | % | அளவு (மெற்றிக் தொன்) | % | |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வளமாக்கிக் கம்பனி | 163,056 | 30 | 159,123 | 30 | - 2 |
| வரையறுக்கப்பட்ட மக்கள் வளமாக்கி முயற்சி | 60,406 | 11 | 50,476 | 9 | - 16 |
| வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சியல் வளமாக்கி | 47,232 | 9 | வி.கி. | – | – |
| வரையறுக்கப்பட்ட ஏ. பவர் அன்ட் கம்பனி | 68,939 | 12 | 63,642 | 12 | - 8 |
| ஏனையவை | 208,487 | 38 | 266,659 | 49 | + 28 |
| மொத்தம் | 548,120 | 100 | 539,900 | 100 | - 2 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்.